| Case No. **O.S.No.5077/2019** | **P.W.1: Reenu Ponniah** | Date:15.07.2024 |
|---|---|---|

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of the 15th July 2024.

**<u>குறுக்கு விசாரணை :-(3 ஆம் பிரதிவாதி தரப்பில்)</u>**

நான் B.E. Computer Science படித்துள்ளேன். நான் சென்னையில் Wipro Technology என்ற நிறுவனத்தில் முதுநிலை மேலாளராக பணியாற்றி வருகிறேன். Computer நிறுவனத்தில் சுமார் 18 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் உள்ளது. மருத்துவதுறையில் நான் எந்த படிப்பும் படிக்கவில்லை. என்னால் வா.சா.ஆ 25, 26 ஆகிய ஆவணங்களை பற்றி புரிந்து பதில் அளிக்க இயலுமா என்றால், முடியாது. மூன்றாம் பிரதிவாதி அவசர கதியில் என் தாயாருக்கு எவ்விதமான பரிசோதனையும், செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜூன் 2015-ல் என் தாயாருக்கு எடுக்கப்பட்ட ஏதேனும் அறிக்கையை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ 1, 2, 3 மற்றும் 25 ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நான் 1 ஆம் பிரதிவாதி மருத்துவமனையிலிருந்து ஜூன் 2015-ல் பெறப்பட்ட ஆவணங்களை தவிற வேறு இதர மருத்துவமனைகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளையோ, பரிசோதனைக்கூட அறிக்கைகளையோ தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். மூன்றாம் பிரதிவாதி எனது தாயாருக்கு Scan பரிசோதனை மட்டுமே செய்தார் என்றும், வேறு இதர மருந்து மாத்திரைகளை பரிந்துரைக்கவோ, அது குறித்து ஆலோசனையோ தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் 3 ஆம் பிரதிவாதியை என் தாயாருக்கு Scan எடுக்க அனுகிய தேதியான 25.06.2015-க்கு முன்போ, பின்போ சந்திக்கவில்லை என்றால் சரிதான். மூன்றாம் பிரதிவாதியால் வழங்கப்பட்டதாக சொல்லப்படும் வா.சா.ஆ 3-ஆன 25.06.2015 தேதியிட்ட X-ray Mammography அறிக்கையில், மேற்படி அறிக்கையானது தகுதி வாய்ந்த மருத்துவரின் Interpretation-க்கு உட்பட்டது என பொறுப்பு துறப்பு நிபந்தனை எண். 2-ல் காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணமானது என் தாயாருடைய வாய்மொழி சாட்சியத்தின் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி தரப்பில் மூன்றாம் பிரதிவாதிக்கு எதிராக ஏதேனும் வழக்கு நுகர்வோர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக என்றால் இல்லை.

Taken down by me in the open court and was read over to the witness and accepted and signed by him/her to be correct

V PANDIARAJ

Digitally signed by V PANDIARAJ
Date: 2024.07.15 18:42:02 +0530

Dt:10.07.2024 IV Additional Judge.